RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s211

# மானிடவியல் நோக்கில் திணைக்குடிகளின் வாழ்வியல்

க. விஜயகுமாரி [அ, *], ம. பிரேமா [அ]

[அ] தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), திருச்சிராப்பள்ளி-620002, தமிழ்நாடு, இந்தியா.

# Anthropological Perspectives on the Life of the Five Land forms People

K. Vijayakumari [a, *], M. Prema [a]

[a] Research Department of Tamil, Holy Cross Colleg, (Affiliated to Bharathidasan University), Tiruchirappalli-620002, Tamil Nadu, India

* Corresponding Author: vijisurya277@gmail.com

Received: 02-09-2022
Revised: 18-10-2022
Accepted: 28-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

The life style of the ancient Tamils is well known by the five types of landforms (Kurinji, Mullai, Marutham, Neithal, Pallai). Numerous cultural elements are connoted with the five types of landforms. Though the world is widely spread it is divided into five types of landforms. These five types of landforms were found out during Sangam period of Tamilnadu. The life style and the mode of all the five landforms are completely different. In literary tradition, Kurinji is a land filled with mountains and hilly regions. In Tamilnadu human life life has been seen since the Stone Age and they record the lifestyle of the Great Age.

**Keywords:** Kurinji, Mullai, Marutham, Neithal, Pallai, Thinai

## முன்னுரை

தொல் தமிழர்களின் வாழ்க்கை முறை ஐவகை திணைகளால் அறியப்பட்டது. திணையே வாழ்வாகப் பேசப்பட்டது. எண்ணற்ற பண்பாட்டுக் கூறுகள் ‘திணை’ என்ற பொருளோடு அர்த்தப்படுத்தப்பட்டன. இந்நிலவுலகம் பரந்து விரிந்து காணப்பட்டாலும் ஐந்து வகையான திணைகளே உள்ளன. இவ்ஐந்து திணைகளும் சங்ககாலத் தமிழகத்திலேயே காணப்பட்டது. நமது தமிழ் மண்ணின் சிறந்த அடையாளங்களில் ஒன்றாக உள்ளது. இந்த ஐந்திணைகளிலும் வாழ்வுமுறை வெவ்வேறு வடிவங்களில் வளர்ந்து வந்தது. மக்கள் தன்னியல்பான இயல்முறை வளர்ச்சியோடு இயக்கம் பெற்றிருந்தனர்.

## குறிஞ்சித் திணைக் குடிகள்

இலக்கிய மரபில் குறிஞ்சி என்பது மலையும் மலை சார்ந்த பகுதியுமாகும். சங்க இலக்கியம் குறிப்பிடும் மலைகள் தொடர்ச்சியானவை. தமிழகத்தில் கற்காலம் தொடங்கி மனிதகுலத்தின் வாழ்வு காணப்பட்டாலும் பெருங்கற்படைக்கால வாழ்வு முறையையே பதிவிடுகின்றன (Stephen, 2004). சில குறிஞ்சித் திணைக் குடிகளைக் காணலாம் (மூன்று முக்கிய குடிகளை மட்டும்).

## வேட்டுவர்

வேட்டுவர் பெரும்பாலும் வேட்டைத் தொழிலைச் சார்ந்தவராகவே காட்டப்பட்டுள்ளனர். வேட்டுவரே பழமையான வாழ்வு முறையைக் கொண்டவர்களாக இருந்தனர் என்பதை

'வல்வில் வேட்டுவன்' (Balasubramanian, 2004)

'கொலைவல் வேட்டுவன்' (Balasubramanian, 2012)

'இரும்புலி வேட்டுவன்'

'யானை வேட்டுவன்' (Balasubramanian, 2004)

'முயல் எறிந்த வேட்டுவன்'

'பார்வை வேட்டுவன்'

போன்ற பதிவுகளின் வழி அறியலாம் (Balasubramanian, 2012).

வேட்டைக் கருவிகளில் தொன்மையானவை வில், அம்பு. இவற்றைப் பயன்படுத்தியவன் வேட்டுவன்.

## கானவர்

காட்டையே சார்ந்து வாழ்ந்த குடிகள். ஆதலால் இவர்கள் 'கானவர்' எனப் பெயர் பெற்றனர். இவர்கள் காட்டெரிப்பு வேளாண்மையை மேற்கொண்டனர். பண்டைய வேட்டைத் தொழிலையும் தக்க வைத்துக் கொண்டனர். இன்னுமொரு துணைத் தொழிலிலும் ஈடுபட்டனர். கைவினைத் தொழிலுக்கான மூலாதாரப் பொருட்களை மலைகளிலிருந்து தோண்டி எடுத்தனர். குன்றுகளில் யானைத் தந்தங்களைக் கொண்டு கிளறி மண்ணடுக்குகளில் புதையுண்ட 'பொன் படிமங்களை' வெட்டி எடுத்தனர் என்பதை,

'பெருமலைச் சிலம்பின் வேட்டப் போகிய

செறிமடை அம்பின், வல்வில் கானவன்

பொருது தொலை யானை வெண்கோடு கொண்டு

நீர் திகழ் சிலம்பின் நன் பொன் அகழ்வோன்' (Balasubramanian, 2009)

'கடறுமணி கிளரச் சிதறுபொன் மிளிர'

என்ற வரிகளின் வழியே அறியலாம் (Balasubramanian, 2004).

## குறவர்

குறவர் மாக்கள் மலைகளில் காட்டெரிப்பு வேளாண்மையையும் காடுகளில் வேட்டையையும் உணவு சேகரித்தலையும் மேற்கொண்டவர்கள். 'காடு கொன்று நாடாக்கி' என்பதே அன்றைய மக்களின் தேவையாக இருந்தது. குறவர்களின் குடியும் தினைப் புனங்களும் அதிகத் தொலைவில் இல்லை. குறவர்கள் மலைகளில் வாழ்ந்தனர் என்பதனை

'கானுழு குறவர்'

'மலையுறை குறவன் காதல் மடமகள்'

'மரல்நார் உடுக்கை மலையுறை குறவர்' (Balasubramanian, 2012)

'குன்றம் நண்ணிக் குறவர் ஆர்ப்ப'

'குன்றக் குறவன் ஆர்ப்பின் எழிலி'


என்ற பாடல்களின் வழி சான்றுகளாக அறியலாம் (Dhatchanamoorthi, 2005).

இவ்வகை மக்கள் வனப்பகுதியிலும் வாழ்ந்தனர் என்பதைக் 'கானக் குறவர் மடமகள்'[14] (நற். 102:8) எனும் நற்றிணை பாடல் வழி அறியலாம். வாழிடம் சார்ந்த தினைப்புனம் உருவாக்கினார்கள்.

## வாழ்வியல் கோட்பாடு

குறிஞ்சியின் வாழ்வியல் கோட்பாடு பின்வரும் இயங்கியலைக் காட்டுகிறது.

## வேட்டை உணவு



"வன்புல வேளாண்வனச்சிறு பொருட்கள் உணவு

உணவு" (சேகரித்தல் வழி)


சங்க காலத்தில் பண்டைத் தமிழர்கள் 'வேட்டை', 'சேகரித்தல்', 'வன்புல வேளாண்மை' ஆகிய மூன்று வகையான உணவாதாரங்களை உருவாக்கிக் கொண்டார்கள். குறிஞ்சி நில வாழ்வில் 'பாதீடு' (பங்கிடுதல்) ஒரு தலையாய பொருளியல் கூறாக விளங்கியது.

## முல்லைத்திணைக் குடிகள்

காடும் காடு சார்ந்த இடமும் முல்லை. இங்கு ஆயர் வாழ்வும் வன்புல வேளாண்மையும் முக்கியத் தொழில்கள் ஆகும். காட்டை ஒட்டியே ஆயர் சமூகத்தினர் வாழ்ந்தார்கள். எனவே தான் ஆயர்கள் காடுறை இடையன்' எனப்பட்டனர். இவர்கள் வாழ்ந்த காட்டுநிலப் பகுதிகள் 'முல்லை', 'புறவு', வன்புலம்' என்று குறிக்கப் பெற்றது. மேய்ச்சல் நிலத்தை 'விடுநிலம்' என்று அழைத்தனர்.

## ஆயர் குடிகளில் சில முக்கிய குடிகள்

1. அண்டர் - 'அண்டர் முல்லைநிலக் குடிகள்' என்று கூறுகிறது. 'அண்டர்களின் தலைவன் கழுவுன்' எனப்பட்டான் (Balasubramanian, 2006). 'அண்டர்கள் எருது வளர்த்தார்கள்' (Nagarajan, 2004).
2. ஆயர் - ஆயர்கள்



| கோட்டினத்தாயர் | கோவினத்தாயர் | புல்லினத்தாயர் |
|---|---|---|
| (எருமை ஆயர்) | (பசு ஆயர்) | (ஆட்டாயர்) |

என்ற மூன்று பிரிவினர் இருந்தனர். இவர்களில் அறம் சார்ந்த ஆயர்கள், மறம் சார்ந்த ஆயர்கள் (புல்லினத்தாயர்) இருந்ததைப் புறநானூறு,

'அறவை நெஞ்சத்து ஆயர்வ லிரும்

மறவை நெஞ்சத்தாயி வாளர்' பகர்கிறது (Balasubramanian, 2004).

மறக்குணம் கொண்ட ஆயர்களையே புல்லினத்தாயர் என்கிறது பின்வரும் பாடல்.

'பகையஞ்சாப்

புல்லினத் தாயர் மகனேன்.....'

இந்த மறவரே பின்னாளில் ஆநிரை கவர்தலைத் தடுக்க உதவினர் (Balasubramanian, 2010).

3. இடையர் - இடையர்கள் பல்வேறு வகையாக உருவகப்படுத்தப்பட்டுள்ளனர்.

'காடுறை இடையன்' (Balasubramanian, 2009)

'வன்கை இடையன்' (Balasubramanian, 2012)

'மறித்துருஉத் தொடுத்த பறிப்புற இடையன்'

'தண்டுகால் ஊன்றிய தனிநிலை இடையன்'

என்றெல்லாம் அழைக்கப்பட்டனர் (Balasubramanian, 2009).

4. குடவர் - 'குடவர் புழுக்கிய பொங்கவிழ்ப் புன்கம்' என்கிறது (Balasubramanian, 2009).

ஆநிரைகளை மிகுதியாக உடைய புல்லி என்பவனுடைய நாட்டில் குடவர்கள் ஆநிரைகளை வளர்த்து வந்தனர்.

5. கோவலர் - கோவலர் குடியினர்

'கோற்கைக் கோவலர்' (Balasubramanian, 2009)

'கொடுங்கோற் கல்லார் கோவலர்' (Balasubramanian, 2009)


'வழூச் சொற் கோவலர்'

என்றெல்லாம் அறியப்பட்டார்கள் (Balasubramanian, 2010). கோவலர் பசுக்களை மேய்த்தனர். வேளாண்மை செய்பவர்களாக மாறியதால் இவர்கள் 'கொல்லைக் கோவலர்' எனவும் 'விதையர்' எனவும் அழைக்கப்பட்டனர்.

## வாழ்வியல் கோட்பாடு

கால்நடைகள் தரும் உணவு

(பால் பொருட்கள் - விலங்கின உணவு)



வன்புல வேளாண் உணவு பண்டமாற்றம் சார்ந்த உணவு (தாவர உணவு) (உப்பு, பிற வகைகள்)

முல்லைத் திணையின் உணவாதார கலப்புப் பொருளாதாரம் சார்ந்ததாக இருந்தது. கால்நடை வளர்த்தல் முதன்மைத் தொழிலாகவும் வன்புல விவசாயம் துணை ஆதாரமாகவும் இருந்துள்ளன. இந்த இரண்டின் அடிப்படையிலேயே உணவாதாரம் இருந்தது. குறிஞ்சியில் 'பாதீடு' மையமாக அமைய, முல்லையில் 'பண்டமாற்றம்' மிகவும் முக்கியமாக அமைந்தது எனலாம்.

### மருதத்திணைக் குடிகள்

வேளாண்மையோடு தொடர்புடைய சிறு சமூகங்கள் (உழவு செய்த பிரிவினர்)

'உழவன்' (Nagarajan, 2004) & (Balasubramanian, 2004)

‘ஏராளர்’

உழவுப் பணிகள் தவிர பிற வேளாண் பணிகள் செய்த பிரிவினர்

‘அரிவார்’ (Nagarajan, 2004)


‘கடைசியர்’ (Balasubramanian, 2004)

‘தொழுவர்’

வினைஞர் (Balasubramanian, 2004)

## வாழ்வியல் கோட்பாடு

மருதத் திணையில் தோன்றிய நன்செய் வேளாண்மையில் நெல்லும் கரும்பும் மிக முக்கியமான பயிர்களாகும் வேளாண் உணவு (உற்பத்தி சார்ந்தது) (Balasubramanian, 2004) & (Balasubramanian, 2009).



குடி ஊழியப் பரிமாற்றம் சந்தை உணவு (உபரியை (தொழில்களைப் பரிமாறிக் விற்றுத் தேவைகளை வாங்குதல்) கொள்ளுதல்-புதிய சமூக வடிவம்)

மருதநில மக்களின் வாழ்வு முறையில் தனித்துவம் என்பது ‘உற்பத்தியும் உபரியும்’ ஆகும். வேளாண்மையும் வணிகமும் வலுவடைந்தன. முல்லைத் திணையில் பெருகியிருந்த பண்டமாற்றம் மருதத்தில் ‘குடி ஊழிய முறை’யாக மாற்றம் பெற்றது. முல்லையில் பண்டங்களைப் பரிமாறிக் கொண்டது போல, மருதத்தில் பல்வேறு குடிகளும் தத்தம் ஊழியத்தைப் பரிமாறிக் கொண்டனர். இது ஒரு புதிய சமூக வடிவமாகப் படிமலர்ச்சி பெற்றது.

### நெய்தல் நிலக் குடியினர்


நெய்தல் திணைக்குரிய பூர்வ குடியினர் பரதவர், பரதர், கமலர், திமிலர், நுளையர், உமணர், வலைஞர், வளையோர், அளவர் ஆவர். நெய்தல் திணையில் வாழ்ந்த குடிகளில் பரதவர்கள் திமில்களில் கடலுக்குச் சென்று மீன் பிடித்தார்கள். பரதர் குடியினர் நாவாய், வங்கம் முதலான பெரிய தோணிகளில் கடல் வழியாக வாணிகம் செய்தனர். பரதவர் வேறு பரதர் வேறு என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

### வாழ்வியல் கோட்பாடு

“மீன்பிடித்தல் (சேகரித்தல்)

உப்பு விளைவித்தல் (உற்பத்தி)

சங்கு, பவளம் முத்துக்குளித்தல் (உற்பத்தி)”



கடல்வழி வணிகம் கலங்கள் மீன் கருவாடு விற்றல் கட்டுதல்(வணிகம்) (பண்டமாற்றம்)

நெய்தலில் சேகரித்தல், பண்டமாற்றம். உற்பத்தி, வணிகம் ஆகிய நான்கு முக்கிய கூறுகள் வாழ்வாதாரத்திற்கும் வகை செய்தன. குறிஞ்சியில் ‘பாதீடு’ முதன்மையான வாழ்வாதாரமாக விளங்க,

முல்லையில் அது பண்டமாற்றமாக உருவெடுத்து நெய்தலில் சேகரித்தல், பண்டமாற்றம் ஆகிய இரண்டும் தொடர்ந்தாலும் சங்கு, பவளம், முத்து ஆகிய விலை உயர்ந்த பொருட்களின் உற்பத்தியும் கடல்வழி வணிகமும் புதிய வாழ்வாதாரங்களாக உருவானதை அறியலாம்.

## பாலைத்திணைக் குடிகள்

குறிஞ்சியும் முல்லையும் கோடையில் திரிந்தலால் பாலை தோன்றியது. கோடையின் வறட்சியிலும் இந்நிலத்தில் பாலை மரம் வாடாமல் கண்ணுக்குப் புலப்பட்டதால் 'பாலை' என்ற பெயர் இத்திணைக்கு வந்தது என்று கூறுவர்.

## மறவர்

மறவர்கள் போர் வீரர்கள் ஆவர். என்றாலும் இவர்கள் பாலைத் திணையில் வாழும் குடியில்லை. ஆனால் வாழ்வின் பெரும் காலத்தைப் பாலையில் செலவிட்டுள்ளனர். வேந்துவிடு தொழிலைச் செய்தனர். சங்க காலத்தில் ஆநிரை கவர்தலும் (வெட்சி) ஆநிரை மீட்டலும் (கரந்தை) சார்ந்த தொறுப்பூசல் (ஆகோள் பூசல்) ஏறக்குறைய அன்றாட நிகழ்வாகவே இருந்ததால் இதில் மறவர்கள் முக்கியப் பங்காற்றினர். மன்னர்களின் படைவீரர்களாகவும் செயல்பட்டனர். மறவர்கள் ஆநிரை கவர்ந்த நிகழ்வை,

'எல்ஊர் எறிந்து, பல்ஆத் தழீஇய

விளிபடு பூசல் வெஞ்சுரத்து இரட்டும்

வேறுபல் தேஅத்து ஆறுபல நீந்தி'

என அகநானூறு விளம்புகிறது (Balasubramanian, 2004).

## எயினர்

வேட்டையாடி உணவு சேகரிக்கும் குடியினராக எயினர் காணப்பட்டனர். இவர்கள் ஆகோள் பூசல், வழிப்பறி, கொள்ளை முதலான செயல்களில் ஈடுபட்டனர். காட்டெல்லையில் எயினர்களின் குடியிருப்பு இருந்தது. பகைப் படையானது நாட்டினுள் புகாதவாறு தடுப்பது இவர்கள் மேற்கொண்ட செயலாகும். அடர்ந்த காட்டின் எல்லை 'எயில்' எனப்பட்டு அதை காத்தமையால் எயினர், எயிற்றியர் என அறியப்பட்டனர்.

## வாழ்வியல் கோட்பாடு

பாலைத்திணை வாழ்வு வேட்டையாடி உணவு சேகரித்தல் தவிர, கொள்ளையடித்தல், வழிப்பறி செய்தல், ஆநிரை கவர்தல் முதலான கொடுஞ்செயல்கள் நிறைந்ததாகவே இருந்தது. இதனைப் போர் பற்றிய மானிடவியலோடு புரிந்து கொள்ள வேண்டும். வேட்டையாடுதல் சேகரித்தல் கொள்ளையடித்தல்

## முடிவுரை

குறிஞ்சித் திணையில் வேட்டையாடி உணவு சேகரிக்கும் ஆதிநிலையும் அது முல்லைத் திணையில் வேளாண்மையாகவும் மருதத்தில் உடைமைச் சமூகமாகவும் நெய்தலில் உற்பத்தி உபரி வணிகமாகவும் ஐவகை நில மக்களின் வாழ்வாதாரம் கலப்புப் பொருளாதாரம் சார்ந்து அமைந்திருத்தலையும் ஐந்திணை பூர்வ குடிகளைப் பற்றியும் மானிடவியல் நோக்கில் புரிந்து கொள்ள இக்கட்டுரையானது வடிவமைக்கப்பட்டுள்ளது.

## References

Balasubramanian, K.V. (2006) Pathupattu, New Century Book House, Chennai, India.

Stephen, G. (2004) Ilakkiya Inavaraiviyal, New Century Book House, Chennai, India.

Balasubramanian, K, V. (2010) Kalithogai, New Century Book House, Chennai, India

Balasubramanian, K.V. (2009) Purananuru, Paavai Publications, Thanjavur, India.

Balasubramanian, K.V. (2004) Agananuru, New Century Book House, Chennai, India.

Balasubramanian, K.V. (2012) Natrinai (Moolamum Uraiyum), New Century Book House, Chennai, India.

Dhatchanamoorthi, A. (2005) Ainkurunuru, New Century Book House, Chennai, India.

Nagarajan, V. (2004) Kurunthogai moolamum uraiyum, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License